TAMILTH Tirunelveli 1 Regional_02 211300 HT166128

பாலக்காடு– திருநெல்வேலி இடையே இயக்கப்படும்

‘பாலருவி’ விரைவு ரயில் இன்று முதல் தூத்துக்குடி வரை நீட்டிப்பு

4 ஆண்டுகால கோரிக்கை நிறைவேறியதால் பயணிகள் மகிழ்ச்சி

தூத்துக்குடி

பாலக்காடு– திருநெல்வேலி ‘பாலருவி’ விரைவு ரயில் இன்று (ஆக.15) முதல் தூத்துக்குடி வரை நீட்டிக்கப்படுகிறது. சுமார் 4 ஆண்டு கால கோரிக்கை நிறைவேறியதால் தூத்துக்குடி பயணிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பாலக்காடு– திருநெல்வேலி இடையே பாலருவி விரைவு ரயில் தினமும் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயிலை தூத்துக்குடி வரை நீட்டிக்க வேண்டும் என, தூத்துக்குடி மாவட்ட பயணிகள் கடந்த 4 ஆண்டுகளாக ரயில்வே நிர்வாகத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

இதையடுத்து, பாலருவி விரைவு ரயிலை தூத்துக்குடி வரை நீட்டிக்க, மத்திய ரயில்வே வாரியம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17–ம் தேதி ஒப்புதல் அளித்தது. அந்த ரயிலுக்கான புதிய எண்கள் மற்றும் கால அட்டவணை அறிவிக்கப்பட்டது. ஆனால், ஓராண்டு ஆகியும் ரயில் நீடிக்கப்படாமல் இருந்து வந்தது.

பயணிகள் நலச்சங்கம், தொழில் வர்த்தக சங்கங்கள் மற்றும் நுகர்வோர் அமைப்புகள், இந்த ரயிலை விரைவாக தூத்துக்குடிக்கு நீட்டிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தன.

இதன் விளைவாக பாலருவி ரயில் இன்று (ஆக்.15) முதல் தூத்துக்குடி வரை நீட்டிக்கப்படுகிறது. பாலக்காட்டில் இருந்து தூத்துக்குடி வரையிலான நீட்டிக்கப்பட்ட புதிய ரயில் சேவையை மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் சுற்றுலாத் துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபி இன்று மாலை 3.45 மணிக்கு கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

வண்டி எண் 16792 பாலக்காடு– தூத்துக்குடி பாலருவி விரைவு ரயில் தினமும் மாலை 4.05 மணிக்கு பாலக்காடு ரயில் நிலையத்தில் புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 4.35 மணிக்கு திருநெல்வேலி சந்திப்புக்கும், காலை 6.15 மணிக்கு தூத்துக்குடி மேலூர் ரயில் நிலையத்துக்கும், 6.40 மணிக்கு தூத்துக்குடி ரயில் நிலையத்துக்கும் வந்து சேரும்.

வண்டி எண் 16791 தூத்துக்குடி– பாலக்காடு பாலருவி விரைவு ரயில் தினமும் இரவு 10 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து புறப்பட்டு, இரவு 10.08 மணிக்கு தூத்துக்குடி மேலூர் ரயில் நிலையம், இரவு 11.25 மணிக்கு திருநெல்வேலி சந்திப்பு சென்று மறுநாள் நண்பகல் 12 மணிக்கு பாலக்காடு சென்று சேரும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

புறவழி பாதையில் இயங்கும் முதல் ரயில்

பாலக்காடு– தூத்துக்குடி பாலருவி விரைவு ரயில் மணியாச்சி புறவழி ரயில் பாதை வழியாக இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மணியாச்சி புறவழி ரயில் பாதை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது. இந்த புறவழி பாதை வழியாக சரக்கு ரயில்கள் மட்டுமே இதுவரை இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது முதலாவது பயணிகள் ரயில் அந்த வழியாக இயக்கப்படுகிறது. தெற்கு ரயில்வேயின் இந்த நடவடிக்கையை பயணிகள் வரவேற்றுள்ளனர்.

இதன் மூலம் மேலும் சில ரயில்களை தூத்துக்குடி வரை நீட்டிப்பதற்கும், தூத்துக்குடி– திருநெல்வேலி பயணிகள் ரயில் நேரத்தை குறைப்பதற்கும், தூத்துக்குடிக்கு கூடுதல் ரயில்களை இயக்குவதற்கும் வாய்ப்பாக அமையும் என பயணிகள் நலச்சங்கத்தினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

பயணிகள் ரயில் ஞாயிறன்று ரத்து

வண்டி எண் 06667/ 06668 தூத்துக்குடி– திருநெல்வேலி– தூத்துக்குடி பயணிகள் ரயில் ஞாயிற்றுக்கிழமைகளில் ரத்து செய்யப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. இந்த ரயிலில் பெரும்பாலும் அலுவலகங்களுக்கு செல்வோர், பள்ளி, கல்லூரி மாணவர்களே பயணித்து வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் அன்றைய தினம் பயணிகள் எண்ணிக்கை மிக குறைவாக இருப்பதால், ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் இந்த ரயில் ரத்து செய்யப்படுவதாகவும், இது, வரும் 18–ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

ஆடி மாதமும் அம்மன் திருவருளும்–30

நெல்லூர்பேட்டை ஸ்ரீதேவி மாசுபடா அம்மன்

வேலூர் மாவட்டம் குடியாத்தம் கவுன்டன்யா ஆற்றின் கரையோரத்தில் உள்ள நெல்லூர்பேட்டையில் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார் ஸ்ரீதேவி மாசுபடா அம்மன்.

ஒரு சமயம் பிரம்மஹத்தி தோஷத்தால் பாதிக்கப்பட்ட இந்திரன், மதுரை சொக்கநாதருக்கு பூஜை செய்ய சென்றார். செல்லும் வழியில் நெல்லூர்பேட்டையில் ஸ்ரீதேவி மாசுபடா அம்மன் சிரசுக்கு பூஜை செய்து அந்த தீர்த்தத்தை குடித்ததும் தோஷம் நீக்கி உடல் நலம் பெற்றார். அன்று முதல் இங்குள்ள அம்மன் சிரசுவை பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர் என்று கோயிலின் தல வரலாறு கூறுகிறது. இந்தக் கோயிலில் மூலவர் சிலை இல்லாமல் சிரசு மட்டுமே உள்ளது. கோயிலில் அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்படும் புனித நீர் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது. இந்த அபிஷேக நீரை குடித்தால் அம்மை போன்ற நோய்கள் நீங்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

ஸ்ரீதேவி மாசுபடா அம்மன் கோயிலின் தல விருட்சமாக அரச மரம் உள்ளது.

இங்கு வரும் பக்தர்கள் இந்த அம்மனை வழிபட்டு, இந்த அரச மரத்தைச் சுற்றி வந்து, தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றி வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டு ஆடி மாதமும் வெள்ளிக்கிழமைகளில் அம்மனுக்கு பக்தர்கள் தங்களது கைகளாலேயே அபிஷேகம் செய்து வழிபடலாம் என்பது இந்தக் கோயிலின் சிறப்பம்சமாகும். ஆடி வெள்ளியில் அம்மனின் அலங்காரத்தை காண கண்கோடி வேண்டும் என்று இங்கு வரும் பக்தர்கள் சிலாகித்து கூறுவதுண்டு.

மக்களின் உயிர், உடமைகளை பாதுகாக்க முன்னுரிமை

தூத்துக்குடி புதிய எஸ்பி தகவல்

தூத்துக்குடி

மக்களின் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாக்க முன்னுரிமை கொடுக்கப்படும் என, தூத்துக்குடி மாவட்ட புதிய காவல் கண்காணிப்பாளராக நேற்று பொறுப்பேற்ற ஆல்பர்ட் ஜான் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்ட புதிய எஸ்.பி. ஆல்பர்ட் ஜான். படம்: என்.ராஜேஷ்

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வந்த எல்.பாலாஜி சரவணன், கோவை மண்டல குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு பிரிவு காவல் கண்காணிப்பாளராக பணியிட மாறுதல் செய்யப்பட்டார். இதையடுத்து, திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிய ஆல்பர்ட் ஜான், தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தூத்துக்குடி மாவட்டத்தின் 33-வது காவல் கண்காணிப்பாளராக ஆல்பர்ட் ஜான் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவரிடம் பாலாஜி சரவணன் பொறுப்புகளை ஒப்படைத்தார். தொடர்ந்து, புதிய எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மக்களின் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாப்பது மிக முக்கியம். அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். கொலை சம்பவங்களாக இருந்தாலும் சரி, விபத்துக்களாக இருந்தாலும் சரி உயிரிழப்புகளைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

‘மாற்றத்தை தேடி’ என்ற சமூக நல்லிணக்க திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். பள்ளி மாணவர்கள், இளைஞர்களிடம் போதை பழக்கத்தை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாவட்டத்தில் போதை பொருள் நடமாட்டத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். வழக்கமான சட்டங்களால் கட்டுப்படுத்த முடியாவிட்டால் குண்டர் தடுப்பு சட்டம் போன்ற தடுப்பு சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

சாதி, மத ரீதியிலான மோதல்களைத் தடுத்து, சமூக ஒற்றுமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். கடலோர மாவட்டமாக இருப்பதாலும், சர்வதேச கடல் எல்லைப் பகுதியாக இருப்பதாலும் கடலோர பாதுகாப்பு படையினருடன் இணைந்து கடத்தலை தடுக்க கண்காணிப்பு தீவிரப்படுத்தப்படும். நகரின் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தூத்துக்குடியில் தொழிலாளி கொலை

தூத்துக்குடி

தூத்துக்குடி காமராஜர் நகர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த சிவபெருமாள் மகன் மாரியப்பன் (42). இவர், தூத்துக்குடி 3-ம் கேட் ரயில்வே மேம்பாலம் அருகே வண்டிப்பேட்டை பகுதியில் உள்ள ஒரு பட்டறையில் வெல்டிங் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். அதே பகுதியில் உள்ள ஒரு கடையில் தூத்துக்குடி திம்மராஜபுரத்தை சேர்ந்த அந்தோணிசாமி மகன் பால்ராஜ் (44) என்பவர் கூலி தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார்.

நேற்று முன்தினம் பால்ராஜ் மது குடித்து விட்டு மேம்பாலம் அருகே நின்று கொண்டு அந்த வழியாக சென்றவர்களை அவதூறாக பேசியுள்ளார். இதனை மாரியப்பன் கண்டித்துள்ளார். இதனால் அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது.

இதில், ஆத்திரமடைந்த பால்ராஜ் அந்த பகுதியில் கிடந்த மரக்கட்டையை எடுத்து மாரியப்பனை சரமாரியாக தாக்கினார். இதில் பலத்த காயமடைந்த மாரியப்பனை அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் மீட்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் நேற்று அதிகாலையில் மாரியப்பன் இறந்தார். மத்தியபாகம் போலீஸார் வழக்கு பதிவு செய்து, பால்ராஜை கைது செய்தனர்.

ராணிப்பேட்டையில் நடைபெற உள்ள மாவட்டங்களுக்கு இடையேயான சப்–ஜூனியர் ஹாக்கி போட்டியில் பங்கேற்கும் தூத்துக்குடி மாவட்ட அணியினரை வழியனுப்பும் நிகழ்ச்சி நடந்தது.

மாவட்டங்களுக்கு இடையேயான போட்டி தூத்துக்குடி மாவட்ட சப்–ஜூனியர் ஹாக்கி அணி இறுதி வீரர்கள் தேர்வு

கோவில்பட்டி/திருநெல்வேலி

ராணிப்பேட்டையில் நடைபெறவுள்ள மாவட்டங்களுக்கு இடையேயான போட்டியில் பங்கேற்கும், தூத்துக்குடி மாவட்ட சப்-ஜூனியர் அணியின் இறுதி வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு, வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

ராணிப்பேட்டையில் மாவட்டங்களுக்கு இடையிலான மாநில அளவில் சப்-ஜூனியர் ஆண்கள் ஹாக்கி போட்டி நாளை தொடங்குகிறது. போட்டிகள் லீக் மற்றும் நாக்-அவுட் முறையில் நடத்தப்படுகின்றன.

மாநில சாம்பியன் போட்டியில் சிறப்பாக விளையாடும் வீரர்களை தமிழக சப்-ஜூனியர் ஹாக்கி அணி தேர்வு செய்யப்படுவார்கள். போட்டியில் தூத்துக்குடி மாவட்ட அணி ‘சி’ பிரிவில் இடம்பெற்றுள்ளது. இந்த பிரிவில் ராணிப்பேட்டை, கோயமுத்தூர், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்ட அணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், கடந்த 4-ம் தேதி தூத்துக்குடி மாவட்ட சப்-ஜூனியர் அணிக்கான வீரர்கள் தேர்வு நடந்தது. இதில், 27 பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு கோவில்பட்டி வ.உ.சி. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானம், நேஷனல் பொறியியல் கல்லூரி மைதானம் ஆகியவற்றில் கடந்த 7 நாட்களாக பயிற்சி முகாம் நடந்தது. நேற்று காலை பயிற்சி முகாமின் நிறைவு விழா நடந்தது. இதில், சப்-ஜூனியர் அணியில் விளையாட உள்ள 18 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து நடந்த வீரர்கள் வழியனுப்பு விழாவில், ஹாக்கி யூனிட் ஆப் தூத்துக்குடி செயலாளர் குருசித்ர சண்முக பாரதி தலைமையில் தொழிலதிபர் கணேஷ்குமார், மனநல மருத்துவர் பாலாஜி, நகர கூட்டுறவு வங்கி மேலாளர் செல்வக்குமார் ஆகியோர் வீரர்களுக்கான சீருடை வழங்கி வாழ்த்தினர்.

திருநெல்வேலி

மாநில சப்ஜூனியர் சேம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க செல்லும், திருநெல்வேலி மாவட்ட அணிக்கான பயிற்சி முகாம் நிறைவுபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட 18 வீரர்களுக்கான சீருடைகள் வழங்கும் விழா, பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மீனா ராமநாராயணன் சீருடைகளை வழங்கினார். ஹாக்கி யூனிட் ஆப் திருநெல்வேலி தலைவர் க.சேவியர் ஜோதி சற்குணம் தலைமை வகித்தார். சங்க செயலாளர் பீர் அலி, இணை செயலாளர் சார்லஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழகத்தில் 2-வது சிறந்த மாநகராட்சியாக தூத்துக்குடி தேர்வு

சென்னையில் இன்று முதல்வர் விருது வழங்குகிறார்

தூத்துக்குடி

தமிழகத்தில் இரண்டாவது சிறந்த மாநகராட்சியாக தூத்துக்குடி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான விருதை சென்னையில் இன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கவுள்ளதாக மேயர் ஜெகன் பெரியசாமி நேற்று தெரிவித்தார்.

தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் மேற்கு மண்டல அலுவலகத்தில் வைத்து, மண்டல அளவிலான மக்கள் குறைகளை தீர்க்கும் முகாம் நேற்று நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து மேயர் ஜெகன்பெரியசாமி பேசுகையில், தூத்துக்குடி மாநகராட்சி பகுதி மக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்காக வாரம் தோறும் மண்டல வாரியாக மக்கள் குறைகளை தீர்க்கும் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 5 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் பெறப்பட்ட 627 மனுக்களில், 510 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்களுக்கும் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது.

தமிழகத்தில் 2023-2024-ம் ஆண்டில் இரண்டாவது சிறந்த மாநகராட்சியாக தூத்துக்குடி மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான விருதை சென்னையில் இன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்.

இவ்விருதை நானும், ஆணையரும் இணைந்து பெற்றுக் கொள்கிறோம் என்றார் மேயர்.

முகாமில் மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், துணை மேயர் ஜெனிட்டா, மண்டலத் தலைவர் அன்னலட்சுமி, துணை ஆணையர் ராஜாராம், மாநகர பொறியாளர் சரவணன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

rakeshh.sridhar@hindutamil.co.in

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை, கட்டடம் (க & ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 12 கட்டட (க & ப) வட்டம் /2024-2025/நாள். 13.08.2024

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை /இரு உறை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம் சென்னை-5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ.எண்	பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு
1.	இரு உறை முறை சென்னை 600 028, பசுமை வழிச் சாலையில் முக்கியப் பிரமுகர்கள் தங்குவதற்கு ரோஜா (NB-11) க்கு அருகில் உள்ள காலி இடத்தில் 3 பங்களாக்கள் கட்டும் பணி. மு.வை.தொகை:ரூ. 5,21,300 / -	ரூ 1022.49 இலட்சங்கள்	12 மாதங்கள்	வகுப்பு I மற்றும் அதற்கு மேல்

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: 18.09.2024 மாலை 03.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 18.09.2024 மாலை 04.00 மணி

செ.ம.தொ.இ / 2996 / ஒப்பந்தப்புள்ளி /2024

கண்காணிப்புப் பொறியாளர்,பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை-5.

KVB கரூர் வைஸ்யா பேங்க் Smart way to bank

தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்., கோட்ட அலுவலகம் கிளை : மால்டி ஸ்கொயர், எண்.10/10, முதல் தளம், வடக்கு பைபாஸ் ரோடு, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி – 627003. போன் : 0462–2915204. மின்னஞ்சல் : tirunelvelido@kvbmail.com

UNSERVED DEMAND NOTICE

சர்பேசிச் சட்டம் 2002 பிரிவு 13(2)ன் கீழ் **திரு.முருகேசன்,** செலுத்த வேண்டிய கடன் கணக்குகளுக்கான நிலுவைத் தொகையினை வசூலிக்கும் பொருட்டு கீழ்குறிப்பிட்டுள்ள கடனாளிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு.

1) திரு.முருகேசன், த/பெ.திரு.சங்கரப்பன், **(கடன்தாரர்),** 101/21 மெயின் ரோடு, அம்பலவாணபுரம், விக்ரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்–627425. **2) திருமதி.வீரலட்சுமி,** க/பெ.திரு.ஸ்ரீ அய்யப்ப நாயக்கர், **(சார்–கடன்தாரர் மற்றும் ஆவண உரிமையாளர்),** கதவு எண்.252 மல்லிகை தெரு, 101/21 மெயின் ரோடு, அம்பலவாணபுரம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்–627425. **3) திருமதி.ரேவதி,** க/பெ.திரு.முருகேசன், **(உத்தரவாதமளித்தவர்),** 101/21 மெயின் ரோடு, அம்பலவாணபுரம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்–627425.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்கு நீங்கள் செலுத்த வேண்டிய மேற்சொன்ன கடன்தொகையை முறையாக திரும்பச் செலுத்தத் தவறிவிட்டபடியால் வங்கி சர்பேசிச் சட்டத்தின் கீழ், நிலுவையிலுள்ள தொகை **அடமானக் கடன் : ரூ.3,59,400.55** (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து நானூறு மற்றும் பைசா ஐம்பத்து ஐந்து மட்டும்) **31.07.2024** தேதி வரை திரும்பச் செலுத்தக்கோரி **08.08.2024** அன்று தங்களுக்கு நோட்டீஸ் அனுப்பியது. தங்களுக்கு பதிவுத்தபால்/தனி அஞ்சல் (கூரியர்) மூலம் அனுப்பப்பட்ட அஞ்சல் விநியோகிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. ஆகவே தாங்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் வங்கிக்கு வந்து கேட்பு அறிவிப்பின் நகலைப் பெற்றுக் கொண்டு கடன் நிலுவைகள் மற்றும் வங்கிப்பிணையம் ஆகியவை குறித்த முழுவிவரங்களைக் அறிந்து கொள்ளுமாறு கோரப்படுகிறீர்கள்.

தாங்கள் மேலே சொல்லப்பட்ட தொகையுடன் **31.07.2024** முதல் தொகை திரும்பச் செலுத்தப்படும் நாள் வரையான வட்டி செலவினங்களுடன் தொகை முழுவதும் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்தவும். தவறினால் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிணையச் சொத்துகளின் மீது வங்கிக்குள்ள உரிமைகளின்படியும் சர்பேசிச் சட்ட விதிகளின்படியும், தக்க நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

சொத்தின் அட்டவணை : ‘A’ அட்டவணை : (அடமான சொத்துகளின் விவரம்) : சொத்து எண்.1 : தூத்துக்குடி பதிவு மாவட்டம், ஒட்டப்பிடாரம் சார் பதிவாளர் அலுவலகம், ஒட்டப்பிடாரம் தாலுகா, குமாரபுரம் கிராமம், மசரா ராமச்சந்திரபுரம், மறு சர்வே எண்.261/3 ல் உள்ள புஞ்சை, 0.37.0 ஹெக்டேர் = 92 சென்ட், கிழபுறம், வடபுறக் கடைசியிலுள்ள 7.272 சென்ட் புஞ்சை, மேற்புறமுள்ள 92 சென்டிற்கு அடுத்துள்ளது, இதில் A.வீரலட்சுமியின் பெயரிலான கதவு எண்.8/58 கொண்ட புதியதாக கட்டப்பட்ட வீடு. **எல்லைகள் :** வடக்கே – கிழமேல் வழித்தடம், தெற்கே – C.கிருஷ்ணசாமி நாயக்கர் மற்றும் K.வீரலட்சுமியின் புஞ்சை, கிழக்கே – C.கிருஷ்ணசாமி நாயக்கர் மற்றும் K.வீரலட்சுமியின் புஞ்சை, மேற்கே – C.கிருஷ்ணசாமி நாயக்கர் மற்றும் K.வீரலட்சுமியின் புஞ்சை. இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள புஞ்சை நிலத்தின் அளவுகளாக, கிழமேல் 33 அடி, தென்வடல் 96 அடி என மொத்தம் 3168 சதுரடி, அதிலுள்ள செங்கல், மணல் மற்றும் சிமெண்டால் கட்டப்பட்ட 43.70 சதுர மீட்டர் கொண்ட ஆர்சிசி வீடு.

இடம் : திருநெல்வேலி
தேதி : 08.08.2024

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
தி கரூர் வைஸ்யா பேங்க் லிட்.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: 19/1, தரைத்தளம், வார்டு எண்.71, பாண்டியராஜபுரம் மெயின் தெரு, மஞ்சள்மேட்டு காலனி, நாகு நகர், மதுரை-625016

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து “உள்ளது உள்ளவாறு” மற்றும் “உள்ள இடத்தில் உள்ளவாறு” எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	23.07.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
166021009000002 1. Mr.நைனா முகமது M N 2. Mrs. ஜெனிபர் பானு N	(i) 04.10.2021 & 30.09.2021 அன்றுள்ளபடி ரூ.28,13,304/- (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து பதிமூன்றாயிரத்து முன்னூற்று நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 21.09.2022 & நேரடியான சுவாதீனம் 05.08.2023	ரூ.47,51,750/- (ரூபாய் நாற்பத்து ஏழு லட்சத்து ஐம்பத்து ஒன்றாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)	₹ 19,67,000/- (ரூபாய் பத்தொண்பது லட்சத்து அறுபத்து ஏழாயிரம் மட்டும்)	₹ 1,96,700/- (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எழுநூறு மட்டும்)

சொத்து விவரம் : பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், மேலபாளையம் சார் பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.10, புதிய வார்டு எண்.9, புதிய திருநெல்வேலி மாநகராட்சி 37வது வார்டு, **பழைய மேதாமார்பாளையம் வடக்கு தெரு, தற்போது மேதாமார்பாளையம் 2வது தெரு, கீழவீரராகவபுரம் கிராமம், மேலபாளையம் நகராட்சி, பாளையங்கோட்டை தாலுகா,** என்னும் முகவரியில் அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 9.625 அடி, வடக்கு தெற்காக கிழக்கு மற்றும் மேற்கு திசையில் 44 அடி, மொத்தம் **423.50 சதுர அடி, அதற்கு சமமாக 39.34 சதுர மீட்டர் நிலம் இதில் கட்டப்பட்டுள்ள RCC வீட்டு கட்டிடம்,** கதவு எண்.25A, பழைய சொத்து வரி மதிப்பீட்டு எண்.88186, பழைய சொத்து வரி மதிப்பீட்டு எண்.89764, புதிய சொத்து வரி மதிப்பீட்டு எண்.01871, மற்றும் டெபாசிட்டுகள் மற்றும் மற்ற வசதிகள். பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: வடக்கு: மேதாமார்பாளையம் 1வது தெரு, கிழக்கு: N.பீர் மொய்தீன்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, மேற்கு: சேகுமீராம்மாள்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, தெற்கு: முகமது ரஃபீக்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 3 அடி, வடக்கு தெற்காக கிழக்கு மற்றும் மேற்கு திசையில் 69 அடி, மொத்தம் **207 சதுர அடி, அதற்கு சமமாக 19.23 சதுர மீட்டர் வழிப்பாதை,** அதனுடன் டெபாசிட்டுகள் மற்றும் அனைத்து உபகரணங்கள், அனுமந்த உரிமைகள், பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: வடக்கு: மேதாமார்பாளையம் 1வது தெரு, கிழக்கு: சையது முகமது-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, மேற்கு: 1வது ஷெட்டியூல் சொத்தில் முகமது ரஃபீக்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, தெற்கு: மேதாமார்பாளையம் 2வது தெரு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 11.09.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **10.09.2024** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் **09.09.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.G.நடராஜன் - Mob: 81470 01897, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் - Mob: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த் - Mob: 98431 14222**

இ-ஏலமானது “உள்ளது உள்ளவாறு” மற்றும் “உள்ள இடத்தில் உள்ளவாறு” எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Vinod Chauhan Mob. No. 98138 87931**)) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 15.08.2024
இடம்: பெங்களூர்

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME

I, V.Balaji @ Subramani born on 11-07-2000 (Native District:Tirunelveli) S/o.Vairavan, residing at No.217, Madurai Road, Thachanallur, Tirunelveli-627 358 shall henceforth be known as **V.BALAJI SUBRAMANI**

V.Balaji @ Subramani

NAME CHANGE

I, Mr.M.Gunaswamy, S/o. Mr.Mathuram, aged about 70 years (Aadhaar Card No.9709 4716 4584), residing at Door No.48/O, Paramarthalingapuram, Kaliankadu, Veturnimadam Post, Kanyakumari - 629003, Tamilnadu, do here by solemnly affirms and state as follows:
1. I am permently residing in the above address.
2. In the front side of my Son G.Raja's Passport No: M7752127 the Name and Surname are correctly printed, But the back side of passport the surname as wrongly printed as "Raja "instead of "Gunaswamy"
3. Now, My son has applied for correction of the surname. It shall henceforth be known as Gunaswamy.
All the above stated are true and correct.

Deponent

NAME CHANGE

I, **HUSSAIN**, S/o. Ahamed Hussain, born on 19.03.1972, (Native District: Tirunelveli) residing at Door No. 81/133, Myla Khader Street, Melapalayam, Tirunelveli District - 627005, Tamilnadu, shall henceforth be known as **YOUSUF HUSSAIN**
Tirunelveli
14.08.2024 **HUSSAIN**

CHANGE OF NAME

I, **JACINTHA JEYAKUMAR** born on 18.06.1963 (Native district Kanyakumari) residing at Door No: 579,2nd, Cross Street, Nesamony Nagar, Nagercoil, Kanyakumari District, Tamil Nadu-629001. shall henceforth be known as **JACINTH JAYAKUMAR.**

JACINTHA JEYAKUMAR

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

MA-TI